
தெணியானுக்கு

அன்புடன் ஜெ.யோ
19/06/93

# படி

பங்குனி 1993 விலை ரூபா 10



2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

‘படி’க்கு ஆக்கங்கள்
எதிர்பார்க்கப்
படுகின்றன.
ஆக்கங்களையும்
கருத்துக்களையும்
எழுதி
அனுப்புங்கள்

படி

ஆசிரியர் குழு:
வெ. தவராஜா
கே. லோரன்ஸ்
ஜீ. நிர்மல்ராஜ்

அட்டைப்படம்
அருந்ததிசபாநாதன்

முகவரி;
இல: 22
செபத்தியார், வீதி
மட்டக்களப்பு.
இலங்கை.

# இறுதி நேரம்

மௌனத்தின் அடியில்
மானுட ஆளுமை விம்மலுற
தன்னைச் சுடப்போகிற மனிதனை
சுடப்போகிற துப்பாக்கியை
பார்த்தபடி நின்றான்

ஊரின் கிறவல் தெருக்களும்
பசிய மரங்களும்
பழகிய முகங்களும்
புழுதியும் காற்றும்
போகவிடை தரவில்லை

மீதமுள்ள வாழ்க்கை
சமுத்திரம்போல் விரிவுகொள்ள,
அவன் போகாத இடங்கள்...
சொல்லாத சேதிகள்...
அடையாத இலக்குகள்......
கொடுக்காத முத்தங்கள்......

ஆயிற்று!
நெஞ்செதிரே நீண்டுவிட்ட துப்பாக்கிக் குழல்முன்
பிரமாண்டமாய் விரிந்த கணங்களில்
வாழ்வின் அர்த்தமும் அழைப்பும்
பொங்கி வழிய,
அவன் பேசி முடிப்பதற்குள்...
தன்னை புரியவைப்பதற்குள்...
தீர்ந்தது வெடி

செட்டையடித்துச்
சிதறிக் கரைந்தன
ஒரு நூறு காக்கைகள்

— வாசுதேவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள நாடக உலகில் பரதமுனி எதிரிவீர சரத் சந்திர

சிங்களமூலம்: அனுர பண்டார ராஜகுரு
தமிழ் பெயர்ப்பு: மகேஸ் சோமசுந்தரம்.

கி. மு. 3ம் நூற்றாண்டு காலத்தில் கிரேக்க நாட்டவர் தியோனிஸ் தேவதையை மகிழ்விப்பதற்காக சிரமத்துடனும் பக்தியுடனும் செய்த பூஜையே முறையான நாடகக் கலையின் ஊற்றாகும்.

அரிஸ்டோட்டில் முதல் யூரிபிடிஸ் சொபொக்லிஸ் வரையிலான கிரேக்க நாடகக் கலைஞர்களும், பரதமுனிவரும் நாடகக்கலையினை ஆர்வமுள்ளவர்களுக்குக் கற்றுக் கொடுத்த அன்னியர்கள் வரிசையில் முன்னணியில் இருப்பவர்கள்.

சிங்கள நாடகத்துறைக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து பல தசாப்தங்களாக நாடகக்கலையை உபதேசித்துக் கொண்டிருக்கும் இலங்கையின் பரதமுனி யார்?

ஆம், அவர்தான் நாடக தர்மத்தின் வழி நின்று நாடகக் கலைக்கு புத்துயிர் கொடுத்த இலங்கையின் பரதமுனிவர் பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர. அவர் தனது நீண்ட கலைப் பயண அனுபவங்களை மனம் திறந்து கூறுகிறார்.

''சிறு வயதிலேயே கலை உங்கள் உள்ளத்தைக் கவர்ந்ததா?''

''எனது தந்தையின் ஊர் அக்மீமன. தாயாரின் ஊர் ரத்கம. கம்மத்தகொட. நான் பிறந்தது அம்மாவின் ஊரில். அனேகமாக எனது விடுமுறை நாட்களைக் கழித்தது ரத்கமயில் உள்ள எனது குடும்ப இல்லத்தில் எனது தாயாரின் வீட்டிற்கருகில் சிங்கள பாடசாலை ஒன்று இருந்தது. இந்தப் பாடசாலையின் தலைமையாசிரியர், சிங்கள மொழி, தூதுக் கவிதை ஆகியவற்றில் நிறைந்த அறிவு படைத்த ஒருவர். இவர் எனது மூத்த மாமனாரின் நெருங்கிய நண்பர். மாமா அடிக்கடி அவரைச் சந்திப்பதற்குச் செல்வார். நானும் மாமாவுடன் போய் வருவது வழக்கம். நங்கணவாய் விடு தூதுக் கவிதைகளைக் கேட்பதற்கே அவ்வாறு போய் வந்தேன். தலைமையாசிரியர் தூதுப் பாடல்களை மனனஞ் செய்து மிகவும் அழகாகப்பாடி நங்கணவாயின் பயணத்தை விபரிப்பார் நான் சிறுவனாக இருந்த போதிலும் இலக்கியத்தின் மீது புதுவிதமானதொரு காதல் அதன் மூலம் எனக்கேற்பட்டது. அவ்வாறான திறமையான ஆசிரியர்கள் இந்தக் காலத்தில் கிடைப்பது என்பது சந்தேகமே. அது தற்கால ஆசிரியர்கள் வாழும் சூழலின் தவறே தவிர அவர்களது தவறல்ல என்றே நம்புகிறேன்.

சங்கீதம் என்றதும் எனக்கு முதலில் ஞாபகம் வருவது எனது தாயாரையே. மிகவும் இனிமையான குரல் படைத்தவர். அந்த நாட்களில் அம்மாவும், அப்பாவும், தங்கையும் நானும் இரவில் சாப்பிட்ட பின்பு கிழமையில் ஒரு தடவையாவது மண்டபத்தில் அமர்ந்திருந்து பாட்டுப்பாடுவோம்.

எனக்கு நாட்டுப் பாடல்களில் மிகுந்த விருப்பம் ஏற்பட்டதற்கு வின்சன்ட் ஓல்ப்ரேஸ்ட் என்பவரே காரணம். எங்களுடைய வீட்டில் கிராமஃபோன் ஒன்று இருந்தது. சார்ள்ஸ் டயஸ்,ஜோன் டீ சில்வா போன்ற கலைஞர்களின் நாட்டுப்பாடல்கள் இசைத் தட்டுக்களில் இருந்தன. அப்பொழுது எனது ஒரே பொழுது போக்கு இந்தப் பாடல்களைப் போட்டுக் கேட்பதுதான்.

திரு ஓல்ப்ரேஸ்ட் தொலைபேசி பரிவர்த்தனை நிலையத்தில் பணி புரிந்தார்.

எனது தந்தையின் தபால் நிலையமும் அதற்கு அருகிலேதான் இருந்தது. ஒல்ப்ரேஸ்ட் சுவையான கதைகளைச் சொல்வதில் திறமையானவர். குரலினிமையும் அவரிடமிருந்தது. தொலைபேசி நிலையத்தின் மேசையில் தாளம் தட்டிப் பாட்டுப்பாடுவது எமது வீட்டுக்கு எப்போதும் கேட்கும். சில வேளைகளில் தொலைபேசியிலும் அவர் பாடுவார்

அவரது பாடல்களில் நான் வசமாகி விட்டேன் பகலில் நீண்டநேரம் அவரது அலுவலக அறையில் இருந்து பாடல்களைக் கேட்பேன். தினமும் புதிய புதிய பாடல்களை அவர் பாடுவார். எனது மகிழ்ச்சிக்கோ எல்லை இல்லை.

ஒல்ப்ரேஸ்ட் பாடல்கள் எழுதி வைத்திருந்த புத்தகமொன்றை நான் பிரதி செய்து கொண்டேன்.

அவர் என்னை கண்டி கட்டம்பேக்கு அழைத்துச் சென்று கரோல் வண்டியைக் காண்பித்தார். ஒல்ப்ரேஸ்ட்டுடன் கட்டம்பே கரோல் வண்டிக்குப் பின்னால் சென்று கற்றுக்கொண்ட பாடல்களை நான் சார்பினாவில் இசைக்க அவர் இனிமையாகப் பாடினார்.

பேராசிரியர் சரத்சந்திர தமது இளமைக் கால பசுமை நினைவுகளில் மீண்டுமொருமுறை மூழ்கினார். ''என்னை பல்கலைக் கழகத்துக்கு அனுப்புவதில் எனது தந்தை மிகவும் ஆர்வம் கொண்டிருந்தார், அப்போதிருந்த பல்கலைக் கழக பிரவேசப் பரீட்சையாகிய லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சையில் நான் தேறினேன்.

மகாகவி ரவீந்திரநாத் தாகூர் இக்காலப் பகுதியில் இலங்கைக்கு வந்திருந்தார். அவர் தயாரித்த 'சாபமோச்சன' எனும் நவீன நாடகத்தைப் பார்த்த போது, நான் இது வரை அறிந்திருக்காத ஒரு உலகத்தை தரிசிப்பது போன்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது.

தாகூரின் 'சாபவிமோச்சனம்' மேடையேற்றப்பட்டபோது, அவர் பின்னால் அமர்ந்து இசையின் ராகத்திற்கேற்ப தாளம் தட்டி தனது ஆக்கத்தை ரசித்ததை நினைக்கும் பொழுது இன்றும் சுவாரசியமாக இருக்கிறது.

அந்த நேரத்தில் தாகூர் அவர்கள் தனது குழுவினருடன் லேக் ஹவுஸ் நிறுவனத்தின் ஸ்தாபகரான திரு. டீ. ஆர். விஜயவர்த்தனா அவர்களின் இல்லத்திலேயே தங்கியிருந்தார். தாகூரின் 'சாந்திநிகேதன்' ஐப் பற்றி பல கட்டுரைகள் அந்த நாட்களில் 'டெய்லி நியூஸ்' பத்திரிகையில் வெளிவந்தன. அவற்றை ஒன்றும் விடாமல் மிகுந்த ஆர்வத்துடன் நான் வாசித்தேன்.

'சிங்கள நாடக வம்சக் கதையில் மலர்ந்த தங்கத் தாமரை என்றழைக்கக் கூடிய 'மனமே' நாடகத்தின் ஆரம்பம் எவ்வாறு அமைந்தது? மனமே நாடகத்தை இலங்கையின் கலாச்சாரப் புரட்சியின் ஆரம்பமாக தாங்கள் கொள்வது ஏன்!'

'மனமே' கதை என்ற முறையில் நாட்டார் இலக்கியத்தில் வரும் மக்கள் ஜாதக கதைத் தொகுதியில் வரும் 'சுள்ளதனுக்கக ஜாதகமாகும் ஜாதகக் கதையில் இந்தக்குமாரனின்பெயர் 'சுன்னதனுத்தர' என்பதாகும் கிராமியக் கதைகளில் அவன் 'மனமே' குமாரன் என்றழைக்கப்படுகிறான். மனமேயின் கதை இலங்கையின் தென் மாகாணத்தில் கோலம் நாடகம் முறையில் வெளிப்படுத்தப் பட்டு வந்தது. மனமே கதையில் இருந்து இசை நாடகமொன்றை தயாரிக்க முடியும் என்று ஜப்பானில் இருந்த காலத்தில் எனக்குத் தோன்றியது. ஜப்பானிய சினிமாக் கலைஞர் அக்கிரா குரு சோவாவின் 'ரஷோமன்' திரைப்படத்தைப் பார்த்த பிறகே எனக்குள் இந்த எண்ணம் உருவகியது 'ரஷோமன்' கதையின் சராம்சம் எமது நாட்டின் மனமே கதையுடனும் அன்னத்தனுக்கக ஜாதகக் கதையுடனும் ஒத்ததாக இருக்கிறது,

மனமே பிரதியை நான் எழுதிய வேளையிலும் தயாரித்த வேளையிலும் சாள்ஸ் குணசிங்க அவர்கள் எனக்குத் துணையாக எனது வீட்டில் தங்கி இருந்தார். குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு குறித்த விதத்தில் மெட்டு அமைய வேண்டும் என்று நான் கூறினால் அவர் சில பாடல்களைப் பாடுவார். எனது விருப்புக்கேற்ப நான் தெரிவு செய்து கொள்வேன். பழைய கதையின் கருப் பொருளிலும் பாத்திர அமைப்பிலும், பெண் தெய்வத்தின் பெருமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறும் கதையாக மாற்றம் செய்து மனமேயை தயாரிக்க வேண்டும் என்று குணசிங்க அவர்களிடம் நான்கூறினேன். அதற்கு அவர் 'இந்தப் பெண்களின் மீது ஏன் இவ்வளவு அனுதாபம்' என்று குறை கூறினார்.

மனமே நாடகத்தின் வைபவரீதியான முதற்காட்சி லயனல் வென்ற் அரங்கில் 1956 நவம்பரில் காண்பிக்கப்பட்டது. தொடர்ந்து நான்கு நாட்களுக்குமனமேயை காண்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. 'லயனல் வென்ற்'றின் அப்போதைய உரிமையாளராகிய ஹரல்ட்ஸ் பீரிஸ் அவர்களுடைய அவாவின் காரணமாகவே நான்கு நாட்கள் எனத் திட்டமிடப் பட்டது. கிராமிய ரசனைக்கு ஏற்ப தயாரிக்கப்பட்ட சிங்கள நாடகமாகிய'மனமே'யை லயனல் வென்ற்றில் காண்பிப்பதனை ஒரு பரிசோதனை யாகவேநான் கருதினேன் அவ்வரங்கு ஆங்கிலேய வர்க்கத்தின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டிருந்ததே அதற்குக் காரணம் திரு ஹரல்ட்ஸ் பீரிஸ் அவர்களினால்தான் நான் இந்த சங்கடமான நிலையில் இருந்தேன். எனது ஊகத்தை உறுதி செய்வது போல் ஐம்பது பேர் கூட முதல் நாள் காட்சிக்கு வரவில்லை. திரு. குணசேன கலப்பதி எனக்கு உதவி செய்யும் நோக்கோடு எஞ்சியிருந்த நாட்களில் அயலிலிருந்த பாடசாலைக்குச் சென்று மாணவர்களை நாடகம் பார்க்க அழைத்து வந்தார் மனமே உருவாகிய கால கட்டத்தில் சிங்கள நாடகங்களுக்கு மிகக் குறைந்த வரவேற்பே கிடைத்தது. இதையொட்டி சரத் சந்திர நினைவு கூர்ந்த நிகழ்ச்சி இது:

இடம்:- லயனல் வென்ற் அரங்கு

தினம்:- 1956 நவம்பர் 4. அல்லது 5

நேரம்:- இரவு 6 . 30 மணி இருக்கும்

பேராசிரியர் சரத் சந்திர விறாந்தையில் அமர்ந்திருக்கிறார்.நாகரீகமாக உடையணிந்த எடுப்பான தோற்றத்தையுடைய பெண்மணி ஒருவர் வருகிறார். நாடகத்தின் வைபவ ரீதியான காட்சி தொடங்கி சிறிது நேரம் கழிந்து விட்டிருந்தது.

பேராசிரியர்: அம்மணி, தாங்கள் வந்திருப்பது நாடகம் பார்ப்பதற்க்காகவா? அப்படியானால் உள்ளே செல்லுங்கள்.

பெண்மணி: இது என்ன நாடகம்?

பேரா: மனமே

பெண்: இது சிங்கள நாடகமா?

பேரா: ஆம்

(பெண்மணி முகத்தை சுளிக்கிறார் மீண்டும் ஒரு கேள்வி)

''இது எத்தனை மணிக்கு முடிவடையும்''

''எட்டு மணியளவில்''

''இருக்க முடியாது'' (அந்தப் பெண்ணுக்கு அதிசயமாக இருக்கிறது)

''உள்ளே சென்று பாருங்கள். டிக்கட் தேவையில்லை''

(பேராசிரியரின் பதிலைக்கேட்டு பெண் கோபமடைந்து விட்டார்) 'ச்சீ...நான் ஒரு போதும் சிங்கள நாடகங்களை பார்ப்பதில்லை, நான் வந்தது எனது வேலைக்காரியை அனுப்புவதற்கு' கூறிவிட்டு அந்தப் பெண் திரும்பிச் சென்று விட்டார்,

அன்று அந்த கறுப்பு நிற வெள்ளையர்களது ஆதரவு இல்லாமல் இருந்த சிங்கள நாடகத் துறை இன்று இத்துணை வளர்ச்சி கண்டிருப்பதில் பேரா. சரத்சந்திரவின் பங்களிப்பு எத்தகையது?

சிங்கள நாடகத்துறைக்கு புதிய பரிமாணங்களைக் கொடுக்க அவர் செய்த அர்ப்பணிப்புக்கு அவர் பெற்றுக் கொண்டகைமாறு என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது கேட்கப்பட வேண்டிய ஒரு கேள்வியாகவே தெரிகிறது?

'இப்பொழுது எனக்கிருக்கின்ற ஒரேயொரு ஆசை எனது சொந்த நாடக பீடம் ஒன்றை ஸ்தாபிப்பதாகும். இதன் மூலம் நாடகத்துறை பற்றி என்னிடம் இருக்கும் அறிவு, பொருட்கள் யாவற்றையும் இளைய தலைமுறையினருக்கு நான் தாரைவார்த்துக் கொடுத்து விடலாம்,

அது ஒரு வகையில் தேசிய நாடகக் கலையின் நூதனசாலையாகவும் அமையும் என்னிடமுள்ள நாடகத்துறை பற்றிய பொருட்கள், புத்தகங்கள் ஆகியவற்றை பேணிப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததியினருக்குக் கிடைக்கச் செய்யக் கூடிய ஒரு மையமாக இது அமையும் இந்தப் புனிதப் பணிக்காக எனது வேறு அலுவல்களை விட்டு என் வாழ்வின் மிகுதிக் காலத்தை கழிப்பதற்கு தயாராக இருக்கிறேன், ஆனால் எங்களுக்கு உதவியளிக்க யார் இருக்கிறார்கள். எனது ஆசையை நிறைவேற்ற உதவும்படி நான் சில நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறேன். எமக்குப் பின்பு கலை ஆர்வம் உள்ள பூரணமான பரம்பரையொன்று உருவாவதை நான் காண விரும்புகிறேன். நடிப்பு, காட்சியமைப்பு. தயாரிப்பு போன்றவற்றில் ஈடுபட விரும்பும் இளைய தலை முறையினருக்கான ஒரு பயிற்சிக் களமாக எனது நாடக பீடம் அமைய வேண்டும் என்பது எனது இறுதி ஆசை.

கொழும்பு பல்கலைக் கழகத்தில் கலாசாரப் போதனாசிரியராகப் பணியாற்றுமாறு அண்மையில் உப வேந்தர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் அவர்கள் எனக்கு அழைப்பு விடுத்தார், நான் அங்கே சென்றேன், மாணவர்களும் மிகுந்த பக்தியுடனும் மரியாதையுடனும் சந்தோஷத்துடனும் என்னைச் சூழ்ந்து கொண்டனர். மாணவர்கள் சந்தோஷமடைந்த போதிலும் சில பேராசிரியர்கள் சந்தோஷமடையவில்லை எனது நியமனத்தின் விளைவால் பல்கலைக்கழக ஆசிரியர்களுக்கிடையில் கலகம் ஏற்படுமளவுக்கு நிலைமை மோசமடைந்தது. நான் ஆசையோடு போன போதிலும் சுயாதீனமாக சேவை செய்ய முடியவில்லை, நான் அப்பதவியை இராஜினாமாச் செய்து விட்டேன். எனது நாடகங்களில் இருக்கின்ற தேசியச் சிந்தனை பெறுமதியானது. நான் அதைப் பேணிக் கொண்டு விலகி விட்டேன்.

உங்களது நாடகங்களுக்கு இன்றைய மாணவர்களிடையே நிறைய ஆதரவு இருக்கிறது, அல்லவா?

'ஆம் எனது நாடகங்கள் பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருப்பதால் மாணவர்களிடையே அவை பிரபல்யம் அடைந்து வருகின்றன. மேலும் நானும் எனது மனைவி லலிதாவும் இணைந்து தூரப்பிரதேசங்களில் எனது நாடகங்களைக் காண்பிக்கின்றோம். சேவை நோக்குடனேயே அவ்வாறு செய்கிறோம்.

'நீங்கள் இந்த நாட்களில் புத்தகங்கள் எதுவும் எழுதவில்லையா'?

'பிங் அத்திசரசவிவறமக் தென்னே' என்ற நூலுக்குப் பின் நான் பெற்ற அனுபவத்தையும், கண்ட நிகழ்வுகளையும் தொகுத்து எழுதிக் கொண்டிருக்கிறேன்' இதனை 'பிங் அத்தி குணதேவி நுவணக் தென்னே' என்ற பெயரில் புத்தகமாக வெளியிட இருக்கிறேன்.''

சிங்கள நாடகத்துறையின் சரித்திரமாகிவிட்ட இந்தப் பௌர்ணமி மறைவதற்கு முன்பே அவரது நாடகப் பீடமமைக்கும் ஆசை நிறைவேற வேண்டும் என்று பிரார்த்திக்கின்றோம்.

நன்றி: சரசவிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடு நெருப்பும் கட்டெறும்புகளும்

கருணையோகன்

ஊரடங்குச் சட்டம் எடுக்கப்பட்டு இன்றுடன் மூன்று வாரங்கள். என்றாலும் சனங்கள் வீட்டை விட்டு வெளியேறுவது குறைவு.

'றோட்டில் தனியாகச் சென்ற ஒருவர் காணாமல் போய்விட்டார்.'

'திடீரென்று எங்கிருந்தோ வந்த 'வான்' இருவரைக் கடத்திச் சென்றது?

'கல்லடிப் பாலத்தின் கீழ் மூன்று சடலங்கள்'

'இப்படியாக வந்துசேரும் செய்திகளினால் ஊரில் இன்னமும் பதட்டம் தணியவில்லை. வீட்டின் உள்ளேயிருந்து முற்றத்திற்கே வருவதற்குக்கூட அச்சமாகவிருந்தது.

O O

தங்கம்மா வீட்டு முற்றத்தைப் பார்த்தாள்.

குப்பைக் காடாகக் காட்சி தந்து கொண்டிருந்தது, அது.

விறாந்தையிலிருந்து எழுந்து சென்று முற்றத்தைக் கூட்டத்தொடங்கினாள்.

அவளது சிந்தனை வீட்டினுள்ளே இருக்கும் மகன் குணம் பற்றியதாக இருந்தது. அவன் வயதினை ஒத்தவர்கள் பாதுகாப்பிற்காக வேறிடங்களுக்குச் சென்றுவிட்டனர். முன்பின் அறியாத இடங்களுக்குச் சென்றிருப்பதைவிட மகன் தன்னுடனிருப்பது பாதுகாப்பானது என்று தங்கம்மா நம்பினாள். தன்னால் நடக்க இயலாதபடியால் மகனை அழைத்துக்கொண்டு தூர இடம் செல்லவும் அவளால் முடியவில்லை.

இந்நிலையில் ஊரடங்கு அமுலில் இல்லாமை அவளுக்கு நிம்மதியளித்தது.

''தம்பி''

-மகனைக் கூப்பிட்டாள்.

''அம்மா''

குணம் வீட்டினுள்ளிருந்து பதிலளித்தான்.

''தேத்தண்ணி வை மேனை. ஆச்சி குடிப்பா. நான் இப்படி விட்டிட்டு வந்தால் இண்டைக்கும் கூட்டி முடிக்க ஏலாது''

O O

தேநீர் வைப்பது அவனுக்கு எரிச்சலூட்டும் செயல். தனக்குச் சரியாகத் தேநீர் வைக்கத் தெரியாது என்பது அவனது அபிப்பிராயம். அது மட்டுமன்று. அடுப்பிற்கு முன்னால் குந்தியிருந்து நெருப்புக் குச்சிகளைத் தட்டிக் கொண்டிருப்பதென்பது அவனுக்கு அறவே பிடிக்காத விடயமுங்கூட.

எனினும், மறுக்க முடியாத சூழ்நிலை.

எங்கெங்கோ சென்றுவிட்ட தனது நண்பர்களைப் பற்றி எண்ணியவாறு நெருப்புக் குச்சி ஒன்றினைத் தட்டினான். அது பற்றவில்லை. அடுத்த குச்சியைத் தட்டியபோது சடுதியாகத் தீப்பொறி பறந்து அவனது விரலைச் சுட்டுவிடுகிறது. அதனைத் தாங்கமுடியாது 'ஐயோ, அம்மா'' என்று சத்தமிட்டான்.

தங்கம்மாவிற்குக் காது கேட்பது குறைவு. இல்லாவிட்டால் பதறியடித்துக் கொண்டு வந்து சேர்ந்திருப்பாள்.

ஒருவாறு தேநீர் தயாரித்து ஆச்சிக்குக் கொடுக்கவும் தாய் மறுபடி கூப்பிடவும் சரியாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''வீட்டுக்கு பின்னாலை இருக்கிற பழைய குப்பைகளுக்கு நெருப்பு வைச்சிட்டுபோ, மகன்''

O O

குணம் குப்பை குவிக்கப்பட்டிருக்கும் இடம் நோக்கிச் சென்றான்.

மாமரத்தின் கீழே குப்பைக்குன்று!

முன்னாலே சென்று குந்தியவன் குப்பைக் குவியலை உற்றுக் கவனித்தான்.

இலை குழைகளின் மேலாக கட்டெறும்புகள் வருவதும் போவதுமாகக் காணப்பட்டன.

சிறுவயதிலே அவன் எழுதிய கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

'எறும்புகளே எறும்புகளே
எங்கே நீர் செல்கின்றீர்?
நிரையாக நிரையாக
நேர்கோடு சுவரிட்டு
விரைவாக விரைவாக
எங்கே நீர் செல்கின்றீர்?

குறும்புசெயும் என் தம்பி
வருகின்ற நேரம் பார்!
கருணையின்றி உம்மையெலாம்
நசித்திடுவான் பாவம், நீர்'

'ஐயோ, குப்பைக்குத் தீ வைத்தால் இந்த எறும்புகளும் செத்துவிடுமே...சுவாலையில் கணப்பொழுதில் கருகிச் சாம்பலாகி விடுமே.. ஐயோ அம்மா...எப்படியெல்லாம் துடிதுடிக்குமோ?...'

- என்றெல்லாம் எண்ணிக் கவலையில் மூழ்கினான் குணம்.

குப்பையைக் கொளுத்த முடியாது,அவனால்.

எறும்புகளைக் கண்டால் இனிப்புப் போடுவது என்பது அவனது சிறுவயதுப் பழக்கம் மட்டுமல்ல.

இந்தக் கஷ்ட காலத்திலும் - ஏன் நேற்றுங் கூட - சீனியை எறும்புப் புற்றுக்கு மேல் கொட்டிவிட்டுத் தாயிடம் ஏச்சி வாங்கியிருந்தானே அவன்.

குப்பையைக் கொழுத்தாமல் வீட்டிற்குள் சென்று விட்டான் குணம்.

O O

பின்னேரம் ஐந்துமணியிருக்கும்.

சடுதியாக மூன்றுபேர் வீட்டுக்கேற்றினை இழுக்கின்றனர்.

பதட்டத்துடன் எழுந்துசென்று கேற்றினைத் திறக்கிறாள் தங்கம்.

அவர்கள் முதலில் ஏதோ விசாரித்து விட்டுப் பின்னர் வீட்டிற்குள் இருப்பது யார்? என்று அதட்டிக் கேட்பது குணத்திற்குத் தெளிவாகக் கேட்கிறது.

தயங்கியவாறு அவர்களை நோக்கிச் செல்கிறான் குணம்.

அவர்கள் கதைத்தஎதுவும் தங்கத்திற்கு விளங்கவில்லை.

குணம் பலத்துக் கூறியது மட்டும் அவளுக்கு விளங்கியது:

''நான் இவர்களுடன் சென்று பெயர் பதிந்து விட்டு உடனே வாறன்''

O O

நேரம் நகர்ந்து கொண்டிருந்தது.

அயல் வீட்டார் வேலியினால் எட்டிக் கூப்பிட்டு தங்கம்மாவிற்கு ஏதோ சொன்னார்கள்.

எதையும் விளங்கிக் கொள்ளும் நிலையில் அவள் இல்லை.

எதனாலோ இனம் புரியாத வேதனை நெஞ்சில் படபடப்பு.

சற்றுத் தொலைவில் ஏதோ வெளிச்சம்...

காற்றில் கலந்துவரும் ஒருவித மணம்

ஒரு தடவை கார்த்திகை விளக்கீட்டு வேளையில் வேடிக்கையாக மகன் டயர் ஒன்றினைப் போட்டுக் கொளுத்தியபோது எழுந்த மணத்தினை தங்கத்திற்கு நினைவுப்படுத்துவது போலிருந்தது, அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொலையுண்ட என் மனம்

சோலைக்கிளி

காகங்களே
போய் விழுங்கள் கடலில்;
என் மனதில் குடியிருந்த தும்பியே, புழுவே,
விழுந்து இறவுங்கள் நெருப்பில்.
கொன்றுவிட்டார் என் மனதை:
இலையாய், பூவாய், குருத்தாய்,
என் மனது
செத்துச் சுடு வெயிலில்!

என் மனதை வெட்டியவன்,
தன் பெண்டாட்டியை ஒருபோதும் வைத்திருக்க மாட்டான்.
அவளையும் வெட்டுவான்
குத்துவான், குடைவான்,
துண்டு துண்டாய் உடம்பை
அரிவான்.

தொப்புளைத்
துளைப்பான்.
அவளை அப்படியே அடுப்பில் வைத்து
நெருப்பு மூட்டி வறுப்பான்.

என் மனதை வெட்டியவன்,
தன் பிள்ளையை பச்சையுடன் தின்பான்,
அவன் தின்னாது போனாலும் அவன் பிள்ளை ஒருநாளும்
நிம்மதியாய் இராது
கூனாகி இடறும்.
முழங்கால் வரைக்கும் அவிந்து புழுத்தெறித்து
தவளைபோல் துள்ளும்

என் மனம் -
வானத்தை விழுங்கக் கனவு கண்டு நாளும்
புதுப் புதுக் குருத்தாய்
கக்கி வளர்ந்த என் மனம் -
ஆம், கொலையுண்ட
சந்திப் பூவரசு!

7 - 8 - 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுதலை வேண்டினும்

அ. சங்கரி

எனது
ஓராயிரம் சிறகுகளை
விரிக்கவும்
விண்ணிற் பறக்கவும்
ஏங்கினேன்.

வானின்
நட்சத்திரங்களையும்
சூரியனையும்
தொட்டுப் பார்க்க
அவாவிற்று என் ஆன்மா;

பூமியின் பரப்புக்கு
அப்பால்
அண்ட வெளியில்
'ஸ்பேஸ் ஒடிசியின் விண்கலம் போல
எல்லையின்றிச் சூழலவும்
எண்ணினேன்.

வானிற் பறக்கும்
புள் எல்லாம் நானாக
மாறவும் எண்ணினேன்

ஆனால் -
காலில் பிணைத்த
இரும்புக் குண்டுகள்
அம்மியும் பானையும்
தாலியும் வேலியும்

என்னை
நிலத்திலும்
நிலத்தின் கீழே
பாதாள இருட்டிலும்
அழுத்தும்

நன்றி: சொல்லாத சேதிகள்

## காவல்

மு. மேத்தா

விழிகள்
நட்சத்திரங்களை வருடினாலும்
விரல்களென்னவோ
ஜன்னல் கம்பிகளோடுதான்

நன்றி: கண்ணீர்ப்பூக்கள்

மார்ச் எட்டு சர்வதேச பெண்கள் தினம் ஆண்வழிச் சிந்தனைகளால் உருவாகி இறுகிப் போன சமூக அமைப்பு இது. இதில் பெண்கள் தமது எல்லாச் சுதந்திரங்களையும் இழந்து அடிமைகளாக (அப்படி அடிமைகளாக இருக்கிறோம் என்பதை அறியாமலேயே) வாழ்ந்து வருகிறார்கள். இந்த சமூக அநீதியைச் சுட்டிக்காட்டி பெண்களின் விடுதலையைக் கோரி நிற்பதே பெண்நிலை வாதமாகும். பெண் ஆணுக்கு எந்த வகையிலும் குறைந்தவள் அல்ல என்பதை தெளிவுற நாம் மனித குல வரலாற்றிலிருந்து ஆரம்பிக்க வேண்டி இருக்கிறது. அப்போதுதான் ஒவ்வொரு வரலாற்று வளர்ச்சிக் கட்டத்திலும் எப்படி ஆணின் கை மேலோங்கியது எப்படி பெண் அடுப்படிக்குப் போனாள் என்பதெல்லாம் தெளிவாகும். ஆதலால் தம் கண்முன் நிலவுகிற இன்றைய சமூக அமைப்பை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு மேலோட்டமாகவே சிந்திக்கும் இன்றைய எமது பெரும்பாலான பெண்களுக்கு இப்பெண்ணிலைவாத கருத்தோட்டங்களை உள்வாங்குவதும் புரிந்துகொள்வதும் அவ்வளவு சுலபத்தில் இயலக் கூடிய காரியம் அல்ல. எனினும், ஒரு சிறு வட்டத்துக்குள்ளேனும், இச் சிந்தனை வேரூன்ற ஆரம்பித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கி. பி. அரவிந்தனின் முகங்கொள்

அபிமன்யு

## தொலைதூர வெளிச்சங்கள்

இன்றைய ஈழத்து இலக்கியம் என்பது புலம் பெயர்ந்து சென்றோரின் இலக்கிய முயற்சிகளையும் உள்ளடக்கியதாகவே உள்ளது. எனவே அவைபற்றிய அறிமுகமும் மதிப்பீடுகளும் இடம் பெற வேண்டியதும் அவசியமென எதிர் பார்க்கின்றோம். அவ்வகையில் மேற்கு நாடுகளிலிருந்து வெளியாகும் ஈழத்தவரின் நூல்கள், சஞ்சிகைகள் பற்றிய ஓர் அறிமுகதொடராக இப்பகுதி அமையும்.

''இவை என் முகத்தின்
சில பக்கங்கள், பதிவுகள்
நினைவுப் பரணில் இருந்து
இறக்கப்பட்டவைகள்''

என்ற 'என்னுரை'யுடன் அண்மையில் வெளிவந்துள்ளது பிரான்சில் புகலிடம் தேடி வாழும் கி. பி. அரவிந்தனின் இரண்டாவது கவிதைத் தொகுப்பான முகங்கொள் (நவம். 92)

'என் முகத்தின் சில பக்கங்கள்' என்று கூறப்பட்டாலும் இங்கு ஒரு அரவிந்தனின் முகம் மட்டுமல்ல. பல அரவிந்தர்களின் முகங்கள்; ஒரு அரவிந்தனின் பதிவுகள் மட்டுமல்ல, பல அரவிந்தர்களின் பதிவுகள் அதாவது தனிமனித அனுபவம் சமூக அனுபவமாகியுள்ளது எனலாம்.

மூவகை அனுபவங்கள்-யாழ்ப்பாணம், தமிழகம், பிரான்ஸ்,இங்கு பேசப்படுகிறன.

இங்கு பேசப்படும் யாழ்ப்பாண அனுபவங்கள் வழமைபோல் யுத்த அழிவுக கஷ்டங்கள் பற்றியவை அல்ல. விடுதலைப் போராட்டத்தின் தோற்றம், வளர்ச்சிப் போக்குப் பற்றியவை: கவிஞன் நோக்கிலான விமர்சனங்கள் அவை.

இடைக்காலத்து தமிழக அனுபவங்கள் சொற்பமே. நன்றியுணர்வு கலந்தவை அவை

புகலிட அனுபவங்கள் பன்முகப்பட்டவை; பிரிவுக் கொடுமை, நிறவெறி, அந்நியம், இயந்திரவாழ்வு, (நம்மவர்) சாதி வெறி, பண்பாட்டுச் சீரழிவு முதலியன வாக.

இத்தொகுப்பின் தனித்துவம் - சிறப்பு- என்ன?; அது; அனுபவங்கள் கவிதா அனுபவங்களாகியுள்ளமையே நீண்ட நாட்களின் பின் 'கவிதை' களைத் தரிசிக்க முடிகிறது.

''காற்றும் நெருப்புமாய்
வாழ்வும் இறப்பும்.
கரைந்துருகும் மனிதம்
உயிர்த்துளிகளாய்த்
தேங்கிய வெள்ளம்
கந்தகப் பூமியின்
வெக்கையின் வீச்சம்.
காற்று சுழல்கின்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சருகுகள் பறக்கின்றன
சராசரத்த இரைச்சலுள்
கற்பகத் தருக்களும்
முறிபட்டு வீழ்கின்றன''
என்பது தொடக்கம்,

''நிழலும்
குறுகிக் கரையும்
பார்வை தாழ
நெஞ்சுக்குள் கூசும்.
கறுப்பிலும்
மாற்றுக் குறைந்த
என்னை
பூனைக் கண்கள்
உரிக்கும்,
எலும்பு மச்சைக்குள்ளும்
துழாவும்.
இரத்தம்
கறுப்பாய் இல்லையோ?
இகழ்ச்சி கொப்பளிக்கும்''
என்பது வரை;

''வெளிக்கிட்டாயிற்று
நில் என்பார் எவருமிலர்
செல் என்கின்றது காற்றும்
முகத்திலடித்தபடி...
பனங்கருக்குச் சிராய்ப்பினால்
காய்ச்சுப் போன
நெஞ்சாங் குழி.
நெஞ்சுக்குள் சரசரக்கும்
பனைமரவெளி''
என்பது தொடக்கம்

''மலர்கள் தூவிய
பீடங்கள் ஒவ்வொன்றிலும்
கூர்வாள் உயர்த்திய
வீரரைத் தாங்கும்
பாயும் புரவிகள்.
தேசங்கள் வென்றவர்
சிலையிலும் முறைப்புடன்
தீப்பற்றும் குரல்களால்
செவிகளில் அறைவர்
''வெளியேறு!!
சிலைகள் உயிர்க்கும்
வாள்முனை மினுங்கும்
தாயகம் துறந்தவனே
உனக்கு ஏது இருப்பிடம்?...

என்பது வரை; அனுபவங்கள் கவிதா அனுபவங்களாகியுள்ளமையைக் காணலாம்.

சந்தமும், எளிமையும், கட்டுக்கோப்பும் இயல்பான படிமங்களும் அமைந்த புதுக்கவிதைகளையும் நீண்ட காலத்தின் பின் தரிசிக்க முடிகிறது.

பழமொழிகள் ஆங்காங்கே கச்சிதமாக வந்து விழுகின்றன, ஏனைய கவிஞர்களது கவிதைகளை விட, எ - டு; (பாலுணர்வு வெளிப்பாடு பற்றி):

''கும்பி கூழுக்கழ
கொண்டை
பூவுக் கழுததாம்!
இது
எது
எதற்கழுகின்றது
இடம் வலம்
தெரியாத இடத்தில்''

'முகங்கொள்' என்ற தலைப்பே கவிஞனின் கவிதா ஆற்றலை உணர்த்தி நிற்பதைக் காணலாம்.

அது இடர்களை முகங்கொள், கஷ்டங்களை முகங்கொள், உண்மையை முகங்கொள், நம்பிக்கையுடன் முகங்கொள், காலத்திற்கும் இடத்திற்குமேற்ப முகங்கொள், பல்வேறு - கோபம், ஏக்கம் ஏமாற்றம் என- முகங்கொள் என்றவாறு பற்பல பரிமாணங்களைத் தரும் அர்த்த புஷ்டி பொதிந்த தொடர் அல்லவா? தொகுப்பின் உள்அடக்கத்தின் அடிநாதமே அவைதான்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய சிற்ப ஓவியக் கலைஞர் சி. தட்சணாமூர்த்தி

நா. சனாதனன்

இந்தியாவில் பண்டைய காலத்திலிருந்தே படைப்பாளியின் வெளிப்பாட்டிற்கு ஊடகங்களாய் களிமண்ணும் கருங்கற்களும் பயன்படுத்தப்படும் மரபு இருந்து வந்துள்ளது. இம்மரபால் தோன்றிய பிரமிப்பூட்டும் கற்கோயில்களிலிருந்து ஐயனார் சுடுமண் சிற்பங்கள் வரை பெரும்பாலானவை மதத்தை அடிப்படையாகக் கொண்டவை. ஆனால் இன்றைய சென்னை இயக்கத்தில் (Madras movement) முக்கியமானவரும் சென்னையிலும் இலண்டனிலும் ஓவியத்தை வரண் முறையுடன் பயின்றவருமான C. தட்சணாமூர்த்தியின் படைப்புகள் அவ்வாறல்லாமல் மனித உணர்வுகளுடன் தொடர்புடையன. தட்சணாமூர்த்தியின் பழைய ஊடகத்துடனான புதிய அணுகு முறையின் விளைவே இன்றைய அவரின் படைப்புகள் எனலாம்.

1945 ல் தமிழ் நாட்டிலுள்ள கூடியார்த்தத்தில் பிறந்த C. தட்சணாமூர்த்திக்கு சிறுவயதிலிருந்தே ஓவியத்திலார்வம் இருந்தது. ஆரம்ப காலங்களில் அவரின் வீட்டின் அருகாமையிலிருந்த குயவர்களின் பட்பொம்மைகளாலும், கிராம எல்லைகளிலும் வாசல்களிலும் உள்ள கிராமிய தெய்வவுருக்கள், ஐயனார் சிலைகள், ஐயனார் குதிரைகள் என்பவற்றால் கவரப்பட்டார் பள்ளிப் படிப்பின் போதே உருவமாக்கலிலும், நீர்வர்ண படவாக்கத்திலும் துணிச்சலுடன் ஈடுபட்டார். மாணவப் பருவத்தில் யப்பானிய பதிப்போவியங்கள், ஆபிரிக்க சிற்பங்கள், இந்திய சுவர் ஓவியங்கள். ஐரோப்பிய சிற்பங்கள் என்பவற்றை மீண்டும் மீண்டும் பார்க்க முடிந்தது. பின்னர் 60 களில் இங்கிலாந்து பல்கலைக்கழகத்தில் பயிலும் போது உலகின் முக்கிய படைப்பாளிகளின் படைப்புகளைப் பார்க்க முடிந்தது. இவை அவருள் பாதிப்பை ஏற்படுத்தியது.

1960 இல் சென்னை ஓவியக்கல்லூரியில் பயிற்சி பெற்று வெளி வந்த இவருக்கு அன்றைய கல்லூரி முதல்வரும் சென்னை ஓவிய இயக்கத்தில் முன்னோடியுமான பணிக்கரின் (K.C.S. Paniker) ஊக்கமும் நடத்தையும் ஊக்கமளிப்பதாய் அமைந்தது அதுவே சோழமண்டல ஓவியகிராம உருவாக்கத்தில் தட்சணாமூர்த்தியையும் ஈடுபடுத்தியது எனலாம்.

சோழமண்டல கிராம வாசியாக இருந்தபோதே சுடுமண் சிற்பங்களில் முதல் முயற்சியை மேற்கொண்டார். களிமண்ணின் நெகிழ்ந்து கொடுக்கும் தன்மையும் பின்னர் படைப்பில் ஏற்படும் முப்பரிமாண தன்மையும் அவர் நினைத்ததை வெளிப்படுத்த முடிந்தது. இதனால் தன்னைப் பொறுத்தவரையில் தனது வெளிப்பாட்டிற்கு சுடுமண் சிற்பங்கள் கூடிய சுதந்திரம் தருவதாக கருதும் இவரின் படைப்புகள் பொதுவாய் உணர்வுகளை வெளிப்படுத்தும் மனிதவுருக்கள்.

களி மண்ணின் உடையும் தன்மையும் கருங்கல்லின் கடின, தன்மையும் 1987 ல் சோழமண்டல ஓவியர் கிராமத்தில் நிகழ்ந்த சர்வதேச சிற்ப கலைஞர்களின் முகாமில் தட்சணாமூர்த்தியை கருங்கல்லில் படைக்கத் தூண்டின. அன்றிலிருந்து தொடர்ந்து கருங்கல்லில் படைத்து வருகிறார். கல்லைப் பார்க்கையில் அது தன்னுள் எழுப்பும் உணர்வையே உருக்களாக அதில் குறைக்கழித்தலுடன் சிற்பமாக வெளிப்படுத்துகிறார். கல்லின் பெரும் பகுதியை தக்கவைத்து சிறிய பகுதியை அகற்றி அவற்றுள் மறைந்துள்ள உருக்களை வெளிக்கொணர்ந்துள்ள அவரின் படைப்புகளில் இதனால், ஆரம்ப கல்லில் உள்ள நெழிவுகள், வெட்டுகள் என்பன பிரக்ஞையுடன் இடம் பெற்று விடுகின்றன. 'ஓர் படைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாளி சூழலால் பாதிப்புறல் தவிர்க்க முடியாதது. எனது சூழல் மற்றெல்லாவற்றையும் விட மனிதர்களே அதிகம் காணப்படுகிறார்கள். இவர்கள் ஒவ்வொரு நேரமும் மாறுபடும் உணர்வுடனும் வெளிப்பாட்டுடனும் இருக்கிறார்கள். அவர்களையும் அவர்கள் உணர்வுகளையும் நான் படைக்க முயல்கிறேன். இவ்வாறிருக்கையில் இயற்கைக்காட்சியையோ, அரூபத்தையோ, நில உருக்களையோ நான் ஏன் படைக்க நாட வேண்டும்'? என வினா வெழுப்புமிவர் படைப்புகளில் பெரும்பாலானவை பல்வேறு உணர்வுள்ள முகங்களும், அரைவுருக்களும்,முழுவுருவங்களும் அல்லது உருவங்களின் கூட்டமும் ஆகும். இவ்வுருக்களின் குறுகிய நெற்றியும், மடிக்கப்பட்ட அவயவங்களும் வேகம் மிக்க கரங்களும் உயிருள்ள கண்களும் மட்டுமன்றி அவற்றுடன் ஒன்றிணையும் அலங்காலவுருக்கள் உள்வெட்டுக்கள், விலங்குகள், பறவைகள், தாவரங்கள், இவை எல்லாம் ஒன்றிணைந்து அவர் உள்ளுணர்வை படைப்புகளில் வெளிப்படுத்துகின்றன.

'வன்மையான கருங்கல்லிலும் இலகுவான களியிலும் படைத்தலுக்கு அதிகளவு வித்தியாசமில்லை, ஆனால் களியில் செய்ய முடியாத சிலவற்றை கல்லில் செய்ய முடிகிறது. உதாரணமாக உளியால் ஏற்படுத்தப்படும் வெட்டுக்கள்,புள்ளிகள், கோடுகள் என்பன' என்று கூறும் தட்சணாமூர்த்தி பெரியதும் சிறியதுமாய் நூற்றுக்கும் மேற்பட்ட சிற்பங்களைப் படைத்துள்ளார்.

சிற்பம் மூலம் இந்திய கலைச்சூழலில் நிலைத்துவிட்ட இவர் தன்னை அடிப்படையில் ஓவியர் என்றே கூறிக் கொள்கிறார் எனினும் அவருடைய ஓவியங்களை விட சிற்பங்கள் சக்தி வாய்ந்தவை. ஓவியங்களிலும் ஓர் வகை சிற்ப தன்மையுடன் அலங்கார தன்மையும் காணப்படுகிறது: உள்ளுணர்வின் உந்துதலினாலேயே அலங்காரங்களையும் நிறங்களையும் பிரயோகிப்பதாய் கூறும் இவரதுஓவியங்களில் வெள்ளை நிறப்பாவனையும் எதிர் வர்ணங்களின் பாவனையும் அதிகமாயுள்ளது. ஓவியத்திலிருந்து பெற்ற பாதிப்பை சிற்பத்திலும் சிற்பத்திலிருந்து பெற்றதை ஓவியத்திலுமாய் தொடர்ந்து படைத்து வருகிறார். 'ஓவியமோ சிற்பமோ எதிலும் நான் முன் கூட்டியே எந்தப் பொருளையோ, குறிக்கோளையோ கொண்டு படைக்கத் தொடங்குவதுமில்லை.எந்த தத்துவத்தையும் வெளிக்கொணர முயல்வதுமில்லை. எனது உணர்வையே இவ்வூடகங்களினூடு வெளிக்கொணர விரும்புகிறேன். இதன் விளைவே மனித, உருக்களும் அசைவுகளும் அவற்றின் அழகும்' என்னும் தட்சணாமூர்த்தி படைப்புகளுக்குத் தலைப்பிடல் என்பது பார்வையாளனின் வசதிக்கே' என்கிறார்.

'நான் சுதந்திரமானவன். எல்லா ஊடகத்திலும் என்னை வெளிப்படுத்த விரும்புகிறேன்' நீண்ட நாள் ஓர் ஊடகத்துடனான தொடர்பு தன்னைச் சலிப்படைய செய்வதாயும் கூறும் அவரின் சிற்பங்களில் மனித உருக்கள் மட்டும் நிலைத்த பொருளாய் உள்ளன. உலோகத்திலும், வெண்களியிலும் (செரமிக்) பதிப்போவியத்திலும் குறிப்பிடத்தக்களவிற்கு படைத்துள்ள தட்சணாமூர்த்தி தற்போது சென்னை கலை மற்றும் கைவினைகள் கல்லூரியில் விரிவுரையாளராயுள்ளார். உலகின் பல பாகங்களிலும் இந்தியாவின் முக்கிய நகரங்களிலும் பல சிற்ப ஓவிய கண்காட்சிகள் நடாத்தியும் பங்கு பற்றியும் உள்ளார்.

'அன்று வரலாற்றில் நிலைத்து விட்ட மகாவலிபுர சிற்பங்களையும் ஏனைய கோயில் சிற்பங்களைப் படைக்க முடிந்தது. அதே போல் இன்றைய காலத்து மகாவலிபுரத்தை நாம் ஏன் படைக்க முயலக் கூடாது என்று வினவுவதோடு இப்பேற்பட்ட நிலையான படைப்பிற்காய் சதா முயன்று கொண்டிருக்கும் இத்துடிப்பு மிக்க கலைஞனின் தேடல் தொடர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹாபாரதத்தைப் புரிந்துகொள்ளுதல்

கலாநிதி. சி. மௌனகுரு

மகாபாரதத்தை பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை ஒரு வளர்ச்சி இதிகாசம் என்கிறார்.

வளர்ச்சி இதிகாசம் என்றால் என்ன?

ஒரு கதை காலப்போக்கில் இதிகாச முறையில் வளர்ந்து வருவது. காலத்துக்குக் காலம் பலரால் அக்கதை சொல்லப்பட்டிருக்கும். ஒவ்வொரு காலமும் ஒவ்வொரு விடயம் சேர்க்கப்பட அக்கதையும் சம்பவங்களும் மெல்ல மெல்லப் பெருகி ஒரு முழு நிலையை அடைந்திருக்கும். முழு நிலையை அடைந்ததும் அதன் வளர்ச்சி நிறைவெய்தியிருக்கும். இது இராமாயாணத்திற்கும் பொருந்தும்.

படிப்படியான வளர்ச்சி நிலையை அறியாது; ஆரம்பத்திலேயே இப்படித்தான் இருந்தது என்ற முடிவுக்கு வருவது இதிகாசங்களை விளங்கிக் கொள்வதில் பல குழப்பங்களை ஏற்படுத்தும்.

இதிகாசங்களை சரித்திரமாக நம்புவது பாமரத்தனமாகும்.

மஹாபாரதத்தின் மூலமொழி சமஸ்கிருதம். இது ஒரு லட்சம் சுலோகங்களால் ஆக்கப்பட்டது. உலகத்தில் மிகப் பெரிய தொகுப்பு இது. கிரேக்க ஆதிகாவியங்களான இலியட், ஒடிஸியை விட எண்பது மடங்கு பெரியது.

மகாபாரதக்கதையின் மூலக்கரு கி.மு 1500ம் ஆண்டில் கதைப்பாடல் வடிவில் பாடப்பட்டது. குரு வம்சத்தில் தோன்றிய இரு கிளையான கௌரவருக்கும் பாண்டவருக்கும் இடையே நடைபெற்ற போட்டியும், பிரமாண்டமான குருஷேத்ர யுத்தமும்தான் கதைப் பாடலின் கரு. ஹஸ்தினாபுரத்தையும்,குருஷேத்ரத்தையும் காட்டும் இடங்கள் இன்றும் இந்தியாவிலுண்டு. பாரதத்தில் குறிப்பிடப்படும் விடயம் சம்பந்தமாக இன்றும் விழாக்கள் நடத்தப்படுகின்றன. பாண்டவர் வாழ்ந்த இடம் இது; சென்ற வனம் இது என்று மக்களால் இடங்களும் சுட்டப்படுகின்றன. இத்தனைக்கும் மேலாக இந்த இதிகாசம் இலங்கை, தாய்லாந்து போன்ற இடங்களுக்கும் கடல் கடந்து பரவியுள்ளது. அங்கும் சில நிகழ்வுகள் சடங்கு ரீதியாக இடம் பெறுகின்றன.

மக்கள் மத்தியில் இக் கதைப்பாடல் மிகச் செல்வாக்குப் பெற்றிருந்திருக்க வேண்டும். இக்கதைப்பாடலிலிருந்து வியாசர் என்பவர் - முனிவர் 24000 சுலோகங்களில் இதனை ஒரு கதையாக யாத்தார்.

வியாசர் மகாபாரதத்தின் ஒரு முக்கிய பாத்திரம். ஒருவகையில் இந்த இரு கிளைகளினதும் மூல கர்த்தாவும் அவரே - மஹாபாரதப்படி. 'வியாசர்' என்ற பெயரில் பல சந்தேகங்களுமுண்டு. தொண்ணூற்றொன்பது வீதமானோர் வியாசரை ஒரு முனிவராகவே ஏற்கின்றனர். ஆராய்ச்சியாளர் வியாசர் என்ற பதத்தை ஒரு ஆளாக அன்றி பாரம்பரிய தலைப்பாகவே (genetie title) கொள்கின்றனர். இதன்படி வியாசர் ஒருவரல்ல;பலர் என்பது இவர்கள் கருத்து. அதாவது வியாசர் என்ற பெயரில் பலர் காலத்துக்குக் காலம் எழுதி முழுமை பெற்ற நூலே மகாபாரதம் என்பது இவர்கள் கருத்து.

வியாசரின் காவியம் மூலத்தில் 'ஜெய' என்றே அழைக்கப்பட்டது. ஜெய என்றால் வெற்றி என்று அர்த்தம். பாண்டவரின் வெற்றியே அதன் கரு. இரண்டாவது நிலையில்தான் ஜெய, என்பது பாரதம் என்று ஆகி; பெரிய கதை வடிவம் பெற்றதும் மகாபாரதம் என்று ஆகியிருக்க வேண்டும்.

வியாசரிடம் மகாபாரதத்தைக் கேட்ட வைஜம்பாயன முனிவர் ஜனமேஜய மகராஜன் (பாரதப்படி இவன் பாண்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனின் கொள்ளுப்பேரன்) கூட்டிய சபையில் விவரித்துச் சொன்னார். வைஜம்பாயனர் சொல்லுகையில் மகாபாரதம் 50000 சுலோகங்களாக விரிந்தது.

மிகப்பின்னால் மகாபாரதம் பிரயாணம் செய்வதில் விருப்பமுடையவரும் முனிவருமான சௌதியினால் சௌனக முனிவருக்கும் அவர் குழாத்தினருக்கும் உரைக்கப்பட்டது. அவ்வமயம் இது ஒரு லட்சம் சுலோகங்களாக இன்னும் விரிந்தது.

இதிலிருந்து தெரிவது என்ன?

1) வியாசர் எனப் பெயர் குறிப்பிடப்படும் பலர் ஆரம்பக் கதைப்பாடலில் இருந்து காலத்துக்குக் காலம் இதனை வளர்த்து முழுமையாக்கியுள்ளனர்.
2) வைஜம்பாயனர் மேலும் வளர்த்தார்.
3) சௌதி மேலும் வளர்த்தார்.
4) அரசர்கள், முனிவர், மக்கள் முன்னிலையில் இக்கதை உரைக்கப்பட்டுள்ளது.

இவ்வகையில் ஒவ்வொருவரும் தத்தம் காலத்து நிகழ்ச்சிகள், அரசியல், தத்துவம், சமய வாழ்க்கை, கொள்கைகள், கோட்பாடுகள், விழாக்கள், விரதங்கள் அனைத்தையும் மகாபாரதத்தில் சேர்த்துக் கொண்டனர். இது முற்றுப் பெற்றகாலம் கி பி 400. கி.மு 1500 தொடக்கம் கி பி. 400 வரை என்பது ஏறத்தாழ 1900 வருடங்களை உள்ளடக்கிய பகுதி. 1900 வருடங்களாக ஒரு கதை மெல்ல மெல்ல வளர்த்தெடுக்கபட்டு மகாபாரதம் என்று தரப்பட்டுள்ளது.

1900 வருடங்கள் வாழ்ந்த மக்களின் வாழ்க்கை முழுதும் அதிலுண்டு. இதனால் தான் அதுமனித குல உணர்வுகளைப் பிரதிபலிக்கிறது. பகவத் கீதையும் இவ்வாறுதான் பிற்கால வாக்கில் அதற்குள் புகுத்தப்பட்ட ஒரு தத்துவமாகும். மகாபாரதம் 18 பர்வங்களைக் கொண்டது.

புகழ் பெற்ற நளன், அரிச்சந்திரன், யயாதி போன்றோரின் கதைகள் மாத்திரமல்ல 1900 வருடங்கள் வாழ்ந்த மக்களின் கதைகளும் அதில் உள்ளன. 1900 வருட தத்துவ சிந்தனைகள் அனைத்தும் தரப்பட்டுள்ளன, வேதகாலச்சிந்தனை உப நிடதங்களுக்கு எதிரான சிந்தனைகள் அனைத்தும் வருகின்றன. பகவத் கீதை இவற்றின் கொடுமுடி; சாந்தி பர்வத்திலே அரசியல் அறம் கூறப்படுகிறது. அது ஒரு கால அரசியல் அறமன்று. 1900 வருடங்களாக வளர்ந்து வந்த அரசியல் அறம்.

வேதங்களைப் பற்றி வேதகால வாழ்க்கை முறைக்கியையப் பேசும் ஒருவர் மிகப் பிற்கால மனுதர்ம சாஸ்திர நெறிமுறைகளையும் பேசுவதை எவ்வாறு புரிந்து கொள்வது?

சத்திரியனே நாட்டை ஆளவேண்டும் என்ற மனுதர்ம சாஸ்திரத்திற்கு மாறாக தேரோட்டி மகனான கர்ணன் அரசனாக்கப்பட்டதை எவ்வாறு புரிந்து கொள்வது?

ஒரு பெண் பல கணவன்மாரை மணந்து சமூக அவதூறின்றி வாழ்ந்ததையும் (திரௌபதிக்கு 5 கணவன்மார் குந்திக்கும் 5கணவன்மார்) அவர்களே கற்பு பற்றிப் பேசுவதையும் எவ்வாறு புரிந்து கொள்வது? வில்லையும், கதாயுதத்தையும், சூலத்தையும், கல், மரம் ஆகிய புராதனமான ஆயுதங்களை வைத்திருந்த இக் குலக் குழுக்கள் வியூகங்களை அமைத்து ஒரு வளர்ச்சி பெற்ற பெரும் யுத்தத்தை நடத்தியதை எவ்வாறு புரிந்து கொள்வது?

இவ் வினாக்களுக்கான விடைகளை, மகாபாரதம் பல் நூற்றாண்டுகாலமாக வளர்ச்சி பெற்று வந்த வளர்ச்சிக் காவியம் என்று விளங்கினால்தான் புரிந்து கொள்ள முடியும்.

புராதன காலம் தொடக்கம் வளர்ச்சி பெற்ற காலம் வரையுள்ள சம்பவங்களும், தத்துவங்களும், வாழ்க்கையும், கதைகளும் சங்கமிப்பதாலேயே மேற் சொன்னவை அனைத்தும் அதனுள் அடங்குகின்றன. இப்படிப் பார்த்தால் மகாபாரதத்தை மேலும் புரிந்து கொள்ள முடியும்.

குலம் - குழுக்களாக வாழ்ந்த புராதன நிலை அழிந்து அரசு தோற்றம் பெற்ற காலத்தை மகாபாரதம் உணர்த்துகிறது என்பர் ஆராய்வாளர். தர்ம புத்திரனே ஒரு இடத்தில் இனி கலியுகம் தோன்றுகிறது நாம் வைகுந்தம் செல்வோம், என்கிறான். கலியுகம் அரசு தோற்றத்தின் பின் ஏற்பட்ட அநியாய யுகம்.

பாரதம் மானிடவியல், வரலாற்றியல் பின்னணியில் விளக்கப்பட்டால் மேலும் பல கரிய உண்மைகளைக் காணமுடியும். இவ் வகையில் இந்தியவியலில் றொமிலா தாப்பர், கோஸாம்பி ஆகியோரின் முயற்சிகள் குறிப்பிடற்குரியன. கோஸாம்பியின் நூல் ஒன்று பண்டைய இந்தியா என்ற பெயரில் தமிழிலும் வெளியாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எழுத்தாளர் வ.அ.இராசரத்தினத்துடன் ஒரு பேட்டி

மனோ

எழுத்தாளர் வ. அ. இராசரத்தினம்—

(கவிதை, மொழிபெயர்ப்பு, நாடகம் நாவல் குறுநாவல், சிறுகதை என சகல துறைகளிலும் கால் பதித்தவர்;ஈழத்திலே உள்ள சிறுகதை எழுத்தாளர்களுள் குறிப்பிடத்தககவர்; 1925ல் மூதூரில் பிறந்து அம்மண்ணிலேயே கல்வி கற்றவர். ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியர். படி சார்பில் திருகோணமலையில் நடைபெற்ற பேட்டியினை இங்கு தருகிறோம்.)

மனோ:- நீங்கள் எப்போது எழுத ஆரம்பித்தீர்கள்.

வ.அ.இ:- நான் 1946ல் மட்டக்களப்பு அரசினர் பயிற்சிக் கலாசாலையில் இருந்த போது நண்பர் சிவசுப்பிரமணியம் மூலம் திரு. சித்திவினாயகம் அவர்களின் அறிமுகம் கிடைத்தது. அவர் நிறையப் புத்தகங்கள் வைத்திருந்தார் எனக்கு வாசிக்கக் கூடிய வாய்ப்பு. வாசிப்பதில் எனக்கு ஏற்பட்ட ஆர்வம் தான் என்னை எழுத்தாளனாக மாற்றியது. இக்கால கட்டத்தில் தான் எழுத ஆரம்பித்தேன்.

மனோ:- ஏன் எழுத வேண்டும் என நினைத்தீர்கள். ஏதாவது கொள்கைகள், இலட்சியங்கள் இருந்தனவா?

வ.அ.இ:- இல்லை, நானும் எழுதினால் என்ன என்று தோன்றியது எழுதினேன் அதே வேளை தமிழகத்தின் பிரபல எழுத்தாளர் புதுமைப்பித்தனின் கதைகளை படிக்கும் போது அவர் திருநெல்வேலி சூழலை வைத்து கதை பண்ணுவது எனக்குப் பிடித்தது. எனக்கு மூதூர் சூழலை எழுத்தில் கொண்டு வரவேண்டும் என ஆர்வமும் ஏற்பட்டது எழுதினேன்.

மனோ:- ஆரம்பத்தில் எழுதியது நாவலா சிறுகதையா? அல்லது கவிதையா?

வ.அ.இ:- நான் முதலில் எழுதியது சிறுகதைதான். 'மங்கிய விளக்கு' எனும் தலைப்பில் எழுதினேன். அது 'மழையால் இழந்த காதல்' என பெயர் மாற்றப்பட்டு ஈழகேசரியில் வெளிவந்தது.

மனோ:- நீங்கள் தொடர்ந்து நாவல் சிறுகதை இரண்டும் எழுதி வருகிறீர்கள். விமர்சகர்கள் உங்களது சிறுகதைகள் வெற்றி நாவல்கள் தோல்வி என்கிறார்கள் நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

வ.அ.இ:- நான் இன்னும் நல்ல நாவல் எழுதவில்லை. மேலும் ஈழத்திலே நாவல் எழுதுவதற்கான களம் இல்லை. நல்ல நாவலைப் பிரசுரிக்க ஆட்கள் இல்லை. நிர்பந்தங்களுடன் நாவல் எழுதலாமா என்ன! இத்தனை பக்கங்கள் தான் எழுத வேணும் காதல் இருக்க வேணும் இப்படியான சூழலிலே எப்படி நல்ல நாவல் எழுதுவது? அண்மையில் இலங்கையில் பிரபல பத்திரிகை ஒன்றுக்கு காதல் இல்லாத நாவல் எழுதி அனுப்பினேன் அதை பிரசுரிக்காமல் காதல் கதை கேட்கிறார்கள்.

மனோ:- நீங்கள் எழுத்தாளர் மட்டுமல்ல அன்று தொடக்கம் இன்றுவரை அசுர வாசகனாகவும் இருக்கிறீர்கள். தமிழக எழுத்தாளர்கள் வாசகர்கள், ஈழத்து எழுத்தாளர்கள் வாசகர்கள் இவர்களில் எத்தகைய வளர்ச்சிப் போக்கினை கண்டீர்கள்?

வ.அ.இ:- தமிழக எழுத்தாளர்களை வாசகர்களைப் பொறுத்த வரை அவதானிப்பு கூர்மை பெற்றுள்ளது.

மனோ: ஈழத்திலே இத்தகைய ஆரோக்கியமான நிலை இல்லையே ஏன்?

வ.அ.இ:- ஈழத்தில் நல்ல எழுத்தாளர்கள் இல்லை, தேசிப்பு இல்லை,வாசிப்பு இல்லை கலாபூர்வமான பார்வை இல்லை இதனாலே தான் இந்நிலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனோ:- தமிழக எழுத்தாளர்களில் உங்களுக்குப் பிடித்த எழுத்தாளர் யார்?

வ.அ.இ:- இராஜநாரயணன் தொடங்கி கோணங்கி வரை பல எழுத்தாளர்கள்...

மனோ:- ஈழத்திலே நீங்கள் மதிக்கின்ற எழுத்தாளர்கள்?

வ.அ.இ:- எஸ்.பொ. இலங்கையர் கோன் மருதூர்க்கொத்தன், எஸ். எல்.எம். ஹனிபா

மனோ:- எழுத்தாளராக நீண்ட காலமாக இருக்கும் உங்களுக்கு பத்திரிகை தொடர்புகளும் நிறையவே இருக்கும். பத்திரிகைகளைப் பொறுத்த வரை குழுஆக்கிரமிப்பு காணப்படுகின்றதே. இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

வ.அ.இ:- இன்றல்ல, ஆரம்பத்திலிருந்தே இருக்கிறது. "இலக்கியத்தில் ஒரு நசிவு" ஏற்பட இந்நிலை காரணமாகிறது. இதனால் பல நல்ல எழுத்தாளர்கள் மறைக்கப்படுகிறார்கள். தகுதியற்ற சிலர் எழுத்தாளர்களாக தங்களை இனம் காட்டிக் கொள்கிறார்கள்.

மனோ:- விமர்சனத்தை விரும்பாத எழுத்தாளர்கள் பற்றி என்ன கூறுகிறீர்கள்?

வ.அ.இ:- அவர்கள் இலக்கிய காரர்கள் அல்ல. இலக்கியச் செம்மைக்கு விமர்சனம் வேண்டும். ஆனால் விமர்சனம் நேர்மையாக இருக்க வேண்டும்.

மனோ:- இன்றைய நவீன இலக்கிய எழுத்தாளருக்கு ஏதாவது கூறவிரும்புகிறீர்களா?

வ.அ.இ:- நவீன இலக்கிய வாதிகள் பழந்தமிழ் இலக்கியம் படிக்க வேண்டும். பழந்தமிழ் இலக்கியம் படிக்காதவர்கள் எழுதக் கூடாது.

மனோ:- பழந்தமிழ் இலக்கியம் படிக்க வேண்டும் என்பது சரி, பழந்தமிழ் இலக்கியம் படிக்காமல் ஏன் எழுதக் கூடாது? அப்படி எழுதுபவர்கள் எழுத்தாளர் ஆக மாட்டார்களா?

வ.அ.இ:- பழந்தமிழ் இலக்கியம் படிக்காதவர்கள் எழுதக் கூடாது. அவ்வளவு தான்.

மனோ:- சங்கீதம், நடனம், நாடகம் பண்ணுவதனால் அவன் வரலாறு தெரியவேண்டும். தெரியாமல் பண்ணுபவர் பாமரத்தனமானவர்கள் என்று சிலர் கூறுகிறார்கள். நீங்களும் இக்கருத்துடையவர்போலும். அப்படியானால் தங்களது கலை வரலாறே சரியாகத் தெரியாத சிலரால் தானே கிராமியக் கலை வளர்கிறது. அவர்கள் கலைஞர்கள் இல்லையா?

வ.அ.இ:- நான் அப்படிச் சொல்லவில்லை. பழந்தமிழ் இலக்கியம் படிக்காதவர்கள் நவீன இலக்கியம் எழுதக் கூடாது என்று தான் சொன்னேன்.

மனோ:- நீங்கள் எழுத்தின் மூலம் இலக்கியப்பணி, சமூக சேவை செய்யலாம் என்று எண்ணுகிறீர்களா?

வ.அ.இ:- இல்லை.

மனோ:- உங்களுக்கு ஈழத்திலே முற்போக்கு எழுத்தாளர் என்று குறிப்பிடப்படுகின்ற பேராசிரியர் க.கைலாசபதி, கா.சிவத்தம்பி போன்றவர்களுடன் தொடர்பு இருந்தது. முற்போக்கு எழுத்தாளர்கள் எல்லாம் கொமினிஸ்ருகளா?

வ.அ.இ:- ஒரு எழுத்தாளன் கொம்யூனிஸ்ற் ஆக இருக்கலாம். ஆனால் கொம்யூனிஸ்ற்காரர் எல்லாம் முற்போக்கு எழுத்தாளர்கள் அல்ல. ஆனால் நீங்கள் மேலே குறிப்பிட்ட முற்போக்கு எழுத்தாளர்கள் கொம்யூனிஸ்ருக்கள் எல்லாரும் எழுத்தாளர்கள். தான் என்கிறார்கள். இதனாலேதான் எனக்கும் அவர்களுக்கும் கருத்து முரண்பாடு வந்தது. இவர்களிடமிருந்து விலகி விட்டேன்,

மனோ:- நீங்கள் உங்களுடைய எழுத்தின் மூலம் கொம்யூனிஸ கருத்துக்களை மக்களுக்கு கூறியுள்ளீர்களா?

வ.அ.இ:- இல்லை அது அரசியல் வாதிகள் வேலை. நான் ஆபிரகாம் லிங்கனோ கால் மார்க்ஸ்சோ அல்ல. ஒரு சாதாரண எழுத்தாளன்.

மனோ:- நீங்கள் தொடர்ந்து எழுதுவீர்களா?

வ.அ.இ:- எழுதுவேன் ஆனால் இனி சஞ்சிகைக்கோ பத்திரிகைக்கோ எழுதி அனுப்

(தொடர்ச்சி 20 ம் பக்கம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மோசேயின் டயரி.

## இலக்கிய இரசிகர்களுக்கோர் எச்சரிக்கை:-

அண்மையில் நடந்த ஒரு புத்தக வெளியீட்டுக் கூட்டத்திற்கு தலைமைதாங்கிய எழுத்தாளர் ஒருவர் சொன்னார். ''புத்தக வெளியீடு என்பது பூப்பு நீராட்டு விழா போன்றது'' என்று. இலக்கிய இரசிகர்களே! புத்தக வெளியீட்டுக் கூட்டங்களுக்குப் போகும் போது கொஞ்சம் எச்சரிக்கையாக இருங்கள். இங்கு உங்களுக்கு மஞ்சள் குளிப் பாட்டி மச்சான் முறை கொண்டாடினாலும் கொண்டாடுவார்கள். 'மங்கல' மரபல் லவா அது.

## இலங்கையும், துப்பறியும் நாவல்களும்

தெஹ்ரானில் உள்ள இத்தாலியத் தூதரகத்தில் கலாசார அதிகாரியாகக் கடமை யாற்றும் பேராசிரியர் அஞ்ஜலோ மீஷல் பீமோண்டஸ் (50) அவர்கள் ''கேஹான்'' என்ற பாரசிகப் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், பாரசிக மொழியிலிருந்து ஐரோப் பிய மொழி ஒன்றுக்கு முதன்முதலில் மொழி பெயர்கப்பட்ட 'ஹஸ்தபெஹெக்ஸ' (எட்டுச்சுவர்க்கங்கள்) என்ற கவிதை நூலில் இலங்கையைச் சேர்ந்த மூன்று இளவர சர்களின் துப்பறியும் துணிகரச்செயல்கள் பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதுதான் ஐரோப்பிய துப்பறியும் நாவல்களின் தோற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தது என்று குறிப்பிட்டுள்ளார். ஐரோப்பிய துப்பறியும் நாவலின் தோற்றத்திற்கும் இலங்கைக்கும் ஏதோ ஒருவிதத்தில் தொடர்பு இருப்பது ஆச்சரியப்படத்தக்கதுதான்.

## புதுக்கவிதையில் சிலேடை

மரபுக்கவிதையைச் சீரழித்த சிலேடை புதுக்கவிதையையும் விடவில்லை என்பதற்கு ஒரு உதாரணம்:

ஒருதையில் திருமணம் நடந்தது.
மறுதையில் குழந்தை பிறந்தது.
இரு தைகளுக்கும் இடையில்,
ஏதோ நடந்தது.

இந்தப் புதுக்கவிதையில் ஒரு சொல் ஆங்கிலச் சொல்லாம் புதுக்கவிதை நவீன நாயக்கர் காலத்தில் நடைபோடத் தொடங்குகிறதோ.

## சிறையில் பிறந்த சினிமா

சிறையில் பிறந்த நாவல்கள், கவிதைகள், அரசியல் நூல்கள் பற்றி அறிந்துள் ளோம். அந்த வரிசையில் சிறையில் பிறந்த ஒரு சினிமாபற்றி;

எல்மாஜ்குனே துருக்கியில் சாதாரண குடும்பத்தில் பிறந்த ஒரு நாவலாசிரியன் 20 வது வயதிலே நாவல்கள் எழுதத் தொடங்கினான். ''பொதுஉடமை என்ற புதுயு கம் இந்தத் துருக்கி மண்ணில் என்று மலரும்'' - என்ற கேள்வியுடன் முடியும் இவனது நாவல் ஒன்று 'துருக்கிமண்ணில் இருக்கத் தகுதியற்ற கம்யூனிஸ்ட்' என்ற பட்டத் தையும் 18 மாதச் சிறைத்தண்டனையையும் இவனுக்குப் பெற்றுக் கொடுத்தது. சிறை மீண்ட இவன் சினிமாவைத்தனது போராட்ட ஆயுதமாக்கிக் கொண்டான். 1970 ல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் எடுத்த THEPOOR ONES, ANXIETY, ELEGY என்ற மூன்று படங்களும் துருக்கியை அதிர வைத்ததுடன் பாஸிஸ ஆட்சியாளர்களையும் பதற வைத்தது. இதன் பயன் மீண்டும் சிறை. சிறையில் இருந்து தப்பச் சந்தர்ப்பம் கிடைத்தும் அதை நிராகரித்து இந்தப் பாஸிஸ ஆட்சிக்கெதிரான எனது போராட்டம் இறுதிவரை இந்த மண்ணிலே தொடரும் எனச் சூளுரைத்தான். இவன் சிறையிலிருந்தே ஒரு சினிமாவிற்கான ஸ்கிரீப்டை' எழுதினான். அது சிறையிலிருந்து பிரான்சுக்குக் கடத்தப்பட்டு அவனது நண்பர்களால் அவன் எழுதிய குறிப்புக்களின் படியே படமாக்கப்பட்டு 1984 ம்ஆண்டு வெளிவந்தது. THE WALL என்ற அந்தப்படம் டைரக்டர் எம்மாஜ்குனே என்ற அவனது பெயரைத்தாங்கியே வெளிவந்தது. இந்தப்படம் வெளிவருவதற்கு மூன்று மாதங்களுக்கு முன்பே துருக்கிய இராணுவ அரசு அவனைச் சிறையில் சுட்டுக் கொன்றுவிட்டது.

### திகம்பரக்கவிகள்

திகம்பரக்கவிகள் என்று தம்மை அழைத்துக் கொண்ட நிகிலேஸ்வர், நக்னமுனி சொபண்டராஜி, ஜிவாலமுகி, பைரவய்யா, மஹாஸ்வரன என்ற ஆறுபேரும் 5ம்ஆண்டளவில் ஆந்திராவை ஒரு கலக்குக் கலக்கிக் கொண்டிருந்தார்கள். ஜனபாதசாஹித்ய என்ற மக்களிலக்கிய கதை மக்கள் மொழியிலேபடைத்துக் கொடுத்தார்கள். இவர்களது கவிதைகளை ஆபாசம் என்றும் தேசத் துரோகம் என்றும் கூறி இவர்களைச் சிறையிலடைத்தது இந்திய அரசு. சிறைக்கதவுகளை ஊடறுத்து மக்களைச் சென்றடைந்த இவர்கள் கவிதைகள் விடுதலைக்குப் பிறகு இந்தியர் முழுவதையும் ஒரு வீச்சில் பாதித்தது என்கிறார் தமிழ்நாடன். இவர்களுடைய கவிதைத் தொகுதியான 'திகம்பர காவுலு' வில்லிருந்து உதாரணமொன்று.

போதிமரம்
ஒரு துளி நிழல் தரவில்லை.
காந்தி வழி
ஒரு கரண்டிக் கஞ்சி ஊற்றவில்லை.

### தேரில் வந்தாண்டி இப்போ தெருவில் வாராண்டி:

இலங்கைத் தெருநாடகத்தின் (Sheet play) தந்தை காமினி - ஹேககொட்டுவெகமா பல்கலைக்கழகப் பேராசிரியரான இவர் தெரு நாடகத்தின் மூலம் சமுதாயத்தின் பொய்மை போலித்தனம் போன்றவற்றைக் கிழித்தெறிய முயல்கிறார். 17 ஆண்டுகளுக்கு முன் இவர் தொடங்கிய தெரு நாடகக் குழு மூடிய நாடக அரங்கின் கட்டுப்பாடுகளைத் தகர்த்தெறிந்து நாடக அரங்குகளுக்குச் செல்ல பணமோ, நேரமோ இல்லாத சாதாரண மக்களுக்காக நாடகம் நடத்தியது. இவர்களது ஒவ்வொரு நாடகமும் ஒரு மணித்தியாலத்துக்குக் குறைவாகவே நடைபெறும். அண்மையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியோ; இன்றைய நிகழ்வுகளைப் பழைய கதைமூலம் விளக்கும் முயற்சியோ புதியதொரு நாடகத்தை உருவாக்க இவர்களுக்கு உதவும். இக் குழு வினரின் சாதனைகளில் உதாரணத்திற்கு ஒன்று-

ஐ. நா. உணவு விவசாயக் கழகம் நடத்திய ஒரு கருத்தரங்கின் போது இக்குழுவினர் உள்ளே புகுந்து அங்கேயுள்ள பிரதிநிதிகள் உயர்தர உணவுகளை உண்டுகளித்திருப்பதைக் கேலி செய்து ஒரு தெரு நாடகத்தை நடத்தினர். உணவு விவசாயக் கழகம் இக்கருத்துக்களை ஏற்றுக் கொண்டு இந் நாடகத்தின் உரையாடல்களைத் தனது காலாண்டு இதழில் வெளியிட்டது.

—மோசே

18ம் பக்கத் தொடர்ச்சி

புவதில்லை என முடிவு செய்திருக்கிறேன். சஞ்சிகையாளரோ பத்திரிகையாளரோ என்னைக் கேட்டால் எழுதிக் கொடுப்பேன்.

மனோ:- இன்றைய இளம் எழுத்தாளர்களுக்கு ஏதாவது கூற விருப்புகிறீர்களா

வ. அ.இ:- எந்த ஒரு எழுத்தாளனும் தனது தனித்துவம் பேண வேண்டும். தங்களுடைய சூழலை எழுத்தின் மூலம் வெளிக்காட்ட வேண்டும். தமிழகத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களின் பெயரை இவர்கள் தம்முடைய புனை பெயராக கொள்ளக் கூடாது. ஈழத்து யாழ்பாணத்து... மட்டக்களப்பு... என்று பெயர்வைப்பதையும் தவிர்க்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாதாரண நடையில் எழுதிய அசாதாரண எழுத்தாளர்

வி. ஆனந்தன்

நமது காலத்தின் பிரபல நாவலாசிரியரான விமல் மித்ரா தனது 79ம் வயதில் 1991ம் ஆண்டு காலமானார்.

இவர் ஒரு வங்காள நாவலாசிரியராக இருந்தும் இந்தியா முழுவதும் அறியப்பட்டிருந்தார். கல்கத்தாவில் காளிகட்டிற்கு அடுத்துள்ளகிராமத்தில் பிறந்தார். கல்கத்தாவின் காதலன் என்று சிறப்பிக்கப்பட்டார். கல்கத்தா மாநகரை அதன் எல்லா நன்மை தீமைகளோடும் தனது நாவல்களில் சித்தரித்தார்.

ரவீந்திரநாத்தாகூர், பக்கீம் சந்திர சட்டர்ஜி, சரத்சந்திர சட்டர்ஜி ஆகியோருக்கு பிறகு இந்தியா முழுவதும் அதிகமான வாசகர்களைக் கொண்டிருந்தவர் விமல் மித்ரா, தன்னை சுற்றியுள்ள மனிதர்களையும் அவர்களுடைய துன்பங்களையும் நிராசைகளையும் கலாபூர்வமாக சித்திரிப்பதில் அக்கரை கொண்டதுடன் அதில் வெற்றியும் கண்டார்.

விமல் மித்ராவின் பாத்திரங்கள் நமது அண்டை அயலில் வசிப்பவர்கள் போல் பிரமையை உண்டாக்குவார்கள். அதற்கு காரணம் விமல் தனது சமகால மனிதர்களை அவர்களின் நிறைகுறைகளோடு பாத்திரமாகப் படைப்பது தான்,

அவருடைய பாத்திரங்கள் எல்லாம் கல்கத்தாவையோ காளிகட்டையோ சேர்ந்தவர்களாகவே இருப்பார்கள். கல்கத்தா விலோகாஸர் கோட்டிலோமனிதர்கள் ஒரே மாதிரியானவர்கள் தான் அவர்களுடைய கனவுகளும் ஒரே மாதிரியானவை தான். அதனால்தான் அவருடைய பாத்திரங்கள் பிரதேச, மொழிவேறுபாடுகளைக் கடந்து எல்லா வாசகர்களின் மனங்களிலும் இடம் பிடித்துள்ளார்கள்.

சகேப் பீபீகுலாம் (பிரவுக்களும் பேரர்களும்) கடிதிய கின்லாம்(விலைக்கு வாங்கல்) ஆகிய நாவல்கள் மூலம் விமல் மித்ரா வங்காளத்தின் முதல்தர நாவலாசிரியராகப் பரிணமித்தார். ஜாகீர்தார்கள் பிரபுகளுடைய ஆடம்பர வாழ்வை சகேப்பீபீகுலாம் என்ற நாவலில் கலை அழகுடன் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அந்த பிரபுக்களின் குடும்ப உடைவையும் அழகாகச் சித்திரித்துள்ளார். விமர்சகர்கள் பலரும் இந்த நாவலை ஒரு மகத்தான படைப்பெனக் கூறுகின்றனர்.

விமல் மித்ரா தனது 49 வயதில் தான் பார்த்த உத்தியோகத்தை ராஜிநாமாச் செய்து விட்டு முழுநேர எழுத்தாளராக மாறினார். மாப்போசானுக்கு கிடைத்ததை போல விமல் மித்திராவுடைய ஒவ்வொரு துளிமைக்கும் பெரும் விலை கிடைத்தது.

சாதாரண மனிதர்களுடைய வாழ்வை சாதாரண நடையில் எழுதிய அசாதாரண எழுத்தாளராக அவர் படைப்புகளுக்கூடாக காட்சி தருகிறார்.

தம்மைச் சுற்றி இயங்கும் வாழ்வை கலை அழகுடன் எப்படி இலக்கியமாக்குவது என்பதை வாசகர்களுக்கு மட்டுமல்ல எழுத்தாளர்களுக்கும் விமல் மித்திரா கற்றுக் கொடுத்துள்ளார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மை பார்த்தல்

## ஒரு நூல் - இரண்டு வெளியீட்டு விழா

ஒரு நூலுக்கு எத்தனை தடவையும் அறிமுக விழா நடாத்தலாம். (எழுத்தாளன் சலிக்கும் வரை) ஆனால் ஒரு தடவை தான் வெளியீட்டு விழா இடம் பெற முடியும். இது தான் இலக்கிய தர்மம்.

அண்மையில் ஒரு துறை சார்ந்த நூலுக்கு இரண்டு தடவைகள் வெளியீட்டு விழா நடைபெற்றது. முதல் தடவை யாழ்ப்பாணத்தில். இரண்டாவது தடவைதான் மட்டக்களப்பில். முதலாவது வெளியீட்டு விழா விடயம் அனேகருக்கு தெரியாது.

யாழ்ப்பாணமும் மட்டக்களப்பும் துரதிஸ்ட வசமாக துண்டிக்கப்பட்டிருப்பதை நூலாசிரியர் சாதகமாக்கிக் கொண்டாரா? அல்லது மட்டக்களப்பாரை மட்டமாக எண்ணிவிட்டாரா?... ஏதோ ஒரு தடவை சடங்காசாரங்களுடன் ஒரு நூலுக்கு வெளியீட்டு விழா நடப்பதுவும், சடங்காசாரம் இல்லாமல் ஒரு நூல் இரண்டு தடவை வெளியிடப்படுவதும் நோக்கத்தில் ஒன்றுதான் - விளம்பரம்.

## இளம்பிள்ளை வாதம்

இலக்கியம் என்பதற்கு பிரதேச வரையறை தேவையா? ஒருபடைப்பாளி, இலக்கிய கர்த்தா பிரதேச ரீதியாக பாகுபடுத்தப்பட வேண்டியவனா? மட்டக்களப்பில் பல கலை இலக்கிய முயற்சிகள் முனைப்படைந்துள்ளன. இந்த விடயத்தில் சில அமைப்புக்கள் நன்றிக்குரியவை. வேதனைக்குரிய விடயம் பரந்த இலக்கியம் பேசும் அனேகர் பிரதேசவாதம் கதைப்பதுதான்:

''இவர் என் பிரதேசத்தவர்; எம் மண்ணின் மைந்தர்; எம்மண்ணில் மலர்ந்து மணம் வீசுபவர் அதனால் இவரை......''

இந்நிலமை எமது இலக்கிய பார்வையை குறுக்குவதாக முடியாதா?

## கிளிப்பிள்ளைகள்

மட்டக்களப்பிலே அண்மையில் நடை பெற்ற நாடகம் சம்பந்தமான நிகழ்வொன்றிலே நாடகங்கள் எழுதுவது பற்றி ஒரு விரிவுரையாளர் குறிப்பிடும் போது,

''கடந்த தமிழ் தினப் போட்டியிலே தலை நகரிலிருந்து ஒரு பாடசாலை சிறந்த நாடகத்தை மேடையேற்றியது இந்த நாடகத்தை ஒரு மாணவனே எழுதி தயாரித்தான். அந்நாடகத்தின் உத்தி, நடிப்பு, பிரதியாக்கம், நெறியாள்கை இசை எல்லாமே நாடகத்தில் தேர்ச்சி பெற்றவர் செய்தது போன்றிருந்தது. என்னைக் கவர்ந்துவிட்டது.'' என்றார்.

வேடிக்கை என்னவென்றால் இந்த விரிவுரையாளர் நாடகம் பார்க்காமல் பார்த்தது போல் கூறியதுதான். பார்க்காமல் இவர் எப்படி கூறமுடியும்?
இவரின் ஞான திருஸ்டி என்னே!......

— சுந்தர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகிற் சிறந்த பவுண் தங்க நகைகளுக்கு நம்பிக்கையான இடம்

உதயா

நம்பிக்கை! நாணயம்!! நேர்மை!!!
இவற்றிற்கு இன்றே நாடுங்கள்:

# உ த யா

## நகை மாளிகை

**39, பிரதான வீதி, மட்டக்களப்பு.**

☎ 065 - 2619



*With Best Compliments*
*from*

# Vel Murugan Stores

**No, 19, U. D. A. Building,**
**Market,**
**BATTICALOA.**

☎ 2532




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*With Best Compliments*

*from*

R. KONESWARAN

# S. A. SELVANAYAGAM & SONS

TRINCO ROAD,
BATTICALOA.

DEALERS IN :

PETROLEUM PRODUCTS
AND
HOIST SERVICE STATION

வெளியீடு:
படி ஆசிரியர் குழு.

அச்சகம்:
புனித செபத்தியார்
மட்டக்களப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org